முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு என். மாலைராஜா.

திரு. என். மாலைராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி.

5. அரசினர் தீர்மானம்

உறுப்பினர்கள் திரு. கோ. அரி மற்றும் திரு. வி.பி. கலைராஜன் ஆகியோரைப் பேரவைப் பணிகளிலிருந்து கூட்டத் தொடர் முழுவதும் நீக்கி வைத்த தண்டனையை ஒரு வார காலமாகக் குறைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தங்கள் தீர்மானத்தை முன்மொழியலாம்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் திருவாளர்கள் கோ. அரி மற்றும் வி.பி. கலைராஜன் ஆகியோர் சட்டமன்ற நடவடிக்கைகளில் கலந்துகொண்டு ஜனநாயகக் கடமைகளை ஆற்றுவதற்கு ஏதுவாக அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையை ஒரு வாரமாகக் குறைத்து வழங்கலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையுடன் பரிந்துரைத்த கருத்திற்கிணங்க, திரு. கோ. அரி மற்றும் திரு. வி.பி. கலைராஜன் ஆகியோர் 15-4-2008 முதல் இப்பேரவைப் பணிகளிலிருந்து இக்கூட்டத்தொடர் முழுவதும் நீக்கப்படுவர் என்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்குப் பதிலாக, அவர்களை 15-4-2008 முதல் ஒரு வார காலத்திற்கு மட்டுமே பேரவைப் பணிகளிலிருந்து நீக்கம் செய்யலாம்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

"மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. கோ. அரி மற்றும் திரு. வி.பி. கலைராஜன் ஆகியோர் 15-4-2008 முதல் ஒரு வார காலத்திற்கு அவையைவிட்டு நீக்கி வைக்கப்படுகிறார்கள்."

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் சொல்கிறார்கள். அவர்களுக்காக ஆளுங்கட்சியும் 'ஆம்' என்று சொன்னது என்று. ஆனால், நான் இந்த அவையிலே ஒன்றைச் சொல்கிறேன். அவர் போன முறை இங்கே அமைச்சராக இருந்தவர். எங்களிலே பல முறை இப்படி வெளியேற்றப்பட்டபோது பேராசிரியரும், நாங்களும் விடுத்த வேண்டுகோளை உங்கள் முதலமைச்சர் ஒருநாளாவது எழுந்து எங்களுக்குக் குறைத்ததுண்டா? இல்லையே! அதுதான் கலைஞர்; அதுதான் தி.மு.க; இதுதான் அ.தி.மு.க.

6. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி.

***திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று இரண்டாவது முதல் தொண்ணூற்று ஏழாவது வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்து